Fachhochschule Nordwestschweiz
Pädagogische Hochschule

# ESKE

## **E**rmittlung **s**chulsprachlicher **K**ompetenzen in der **E**rstsprache

# TAMIL

## Aufgabenset 7 bis 9 Jahre Schulerfahrung

© Pädagogische Hochschule FHNW 2018

Professur Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

Mathilde Gyger & Ursula Ritzau

**பயிற்சிகள்**

1. **பின்வரும் பந்தியினை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

**உருளைக்கிழங்கு சிப்ஸ்**




உருளைக்கிழங்கு சிப்ஸ் மெல்லிய பொரித்த துண்டுகளாகும். இது 19ஆம் நூற்றாண்டில் அதிகமாகப் பேசப்பட்டதில் ஒன்றாகும். யார் இதைக் கண்டு பிடித்து விற்பனைக்கு விட்டது என்பதற்குப் பல அறிக்கைகள் உள்ளன. இக் கதைகளில் எது உண்மை என்று கண்டுபிடிப்பது சாத்தியமற்றது. "ஜர்ஜ் குரும்மின்" எனும் சமையற்காரனின் கதை தான் மிகவும் பிரபல்யமானது. 24.08.1853இல் தனது வாடிக்கையாளரை திருப்திப்படுத்துவதற்கு உருளைக்கிழங்கை மெல்லிய துண்டுகளாக வெட்டிப் பொரித்து உப்பை இட்டார். இதன் விளைவு அதிருப்தியான வடிக்கையாளர் மிகவும் திருப்தியடைந்தார். இக் கதை உண்மையாக இருக்கலாம். ஆனால் அதே நூற்றாண்டில் வேறு சமையற்காரர்களும் ஒத்த சிந்தனைகள் கொண்டிருந்தார்கள் என்பது எங்களுக்குத் தெரிகிறது. ஓரே பொருட்களை பல அமெரிக்க சமையற் புத்தகங்களில் குறிப்பிட்டு அதே பொருட்கள் பிரித்தானியாவிலும் தயாரிக்கப்பட்டன.

1890ஆம் ஆண்டிற்குப் பின்னர்தான் " சிப்ஸ்" பல சரக்குக் கடைகளில் விற்கப்பட்டன. 1920ஆம் ஆண்டின் இறுதியில் "விறிட்டுசு" (Fritteuse) கண்டு பிடிப்பால் இதன் தயாரிப்பும், விற்பனையும் அதிகரித்தது. அமெரிக்காவில் நீண்ட தூரம் "சிப்ஸ்"ஐ எடுத்துச் செல்வதற்காக கடந்த தசாப்தங்களில் இதன் பையின் அமைப்பில் மாற்றம் செய்யப்பட்டது. 1950ஆம் ஆண்டின் பின்னர் தான் ஐரோப்பாவில் இதன் விற்பனை அதிகரித்தது.

ஏன் இந்த எழுத்தாளர் இக் கதையை எழுதினார்?

☐ உருளைக்கிழங்கு "சிப்ஸ்" இன் வரலாற்றை வாசகருக்குத் தெரிவிப்பதற்கு.

☐ வேடிக்கையான கதையாக வாசகரை மகிழ்விக்க.

☐ உருளைக்கிழங்கு " சிப்ஸ்" எவ்வாறு தயாரிப்பது என்பதை வாசகருக்கு காட்டுவதற்கு

உருளைக் கிழங்கு " சிப்ஸ்"ஐ யார் கண்டுபிடித்தார் என்பது எங்களுக்குத் தெரியுமா?

☐ ஆம் அவர் " George Crum"

☐ இல்லை வெவ்வேறு மக்களாக இருந்திருக்கலாம்.

☐ இல்லை, ஆனால் எங்கே கண்டுபிடிக்கபப்பட்டது என அறிந்துள்ளோம்.

| | |
|---|---|
| எப்பொழுது உருளைக் கிழங்கு " சிப்ஸ்" கண்டு பிடிக்கப்பட்டது என அறிந்துள்ளோம். | சுரி ☐<br>பிழை ☐ |
| உருளைக்கிழங்கு " சிப்ஸ்" முதல்முறையாக ஐரோப்பாவில் விற்கப்பட்டது. | சரி ☐<br>பிழை ☐ |
| மக்கள் 20ஆம் நூற்றாண்டில் நித்தம் அதிகமாக உருளைக் கிழங்கு " சிப்ஸ்" உண்டதிற்கு பல காரணங்கள் இருக்கின்றன. | சரி ☐<br>பிழை ☐ |




© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

**2. கீழே ஒரு சிறிய பந்தியும், நான்கு வெவ்வேறு நகரங்களின் காலநிலை விளக்கப்படங்களும் உள்ளன. பந்தியை வாசித்து, விளக்கப்படங்களையும் பார்த்த பின்னர் சுருக்கமாக விடயங்களைக் கூறுக.**

**வெப்ப நிலையும் மழையும்**

உலகிலுள்ள சில இடங்களில் கோடைகாலத்தில் அதிகளவு மழையும், வேறு சில இடங்களில் மிகக் குறைவாகவும் மழை பெய்யும். சில பகுதியில் வருடம் முழுவதும் ஒரேமாதிரியான வெப்பநிலை காணப்படும். சுவிட்சர்லாந்தைப் போன்று
மற்றைய இடங்களில் கோடை காலத்திற்கும் குளிர்காலத்திற்கும் இடையே பெரிய வேறுபாடுகள் உள்ளன. நான்கு விளக்கப்படங்களிலும் காட்டப்படும் நகரங்கள் வெவ்வேறு கண்டங்களில் இருந்து வேவ்வேறு காலநிலைகளைக் கொண்டவை. காேனாய் (Hanoi) வியட்னாமிலும் (Vietnam), டுனிஸ் (Tunis) தலை நகரம் டுனிஸின் (Tunesiens) மத்திய தரைக் கடலிலும், டுப்பிலீன் (Dublin) அயர்லாண்டிலும் (Irland), யாக்குட்ஸ் (Jakutsk) மத்தி ரஸ்சியாவிலும் (Russland) அமைந்துள்ளது.




படம் 1 இல் காலநிலை வரைபடத்தில் மழை, வெப்பநிலை வரைபடமும் ஒன்றாக உள்ளது. மழைக்குரியதை இடது பக்கத்தில் மில்லி மீற்றரிலும், வெப்பநிலைக்குரியதை வலது பக்கத்தில் சென்றிகிரேற்றிலும் உள்ளது. வரைபடத்தில் தை தொடங்கி மார்கழி மாதம் வரையிலான சராசரி மழை, வெப்பநிலையைக் காட்டுகின்றது.



© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

**3. “வெப்பநிலையும், மழையும்” என்ற பந்திக்குரிய கேள்விகள் (பயிற்சி 2)**

அ. பயிற்சி 2 ஆம் பந்தியையும், விளக்கப்படத்தையும் வைத்துச் சரியான நகரத்தைக் குறிப்பிடுக.

| | கானோய் Hanoi | டுனிஸ் Tunis | டுப்பிலீன் Dublin | யாக்குட்ஸ் Jakutsk |
|---|---|---|---|---|
| வருடத்தில் சராசரி வெப்பநிலையின் வேறுபாடு 5 க்கும் 15 க்கும் இடைப்பட்ட சென்றிகிரேற் ஆகும். | | | | |
| இந்த நகரத்தில் கோடைகாலத்தில் குறைந்தளவு மழையும், வைகாசியில் இருந்து ஐப்பசி வரை 20 சென்றிகிரேற் அல்லது கூடுதலாகவும் இருக்கும். | | | | |
| ஐப்பசியில் இருந்து சித்திரை வரை மழை பனியாகப் பெய்யலாம். | | | | |

ஆ. 2 ஆம் பயிற்சியின் யாக்குட்ஸ் (Jakutsk) என்ற நகரத்தின் விளக்கப்படத்தை பார்தத பின் சரியான விடையைத் தெரிவு செய்க.

கார்த்திகை மாதத்தில் யாக்குட்ஸ் (Jakutsk) என்ற நகரத்தின் காலநிலை

| | |
|---|---|
| சுமார் 0ºC யும் சுமார் 20 மி.மீ மழை வீழ்ச்சி. | ☐ |
| கிட்டத்தட்ட -10ºC யும் 50 மி.மீ மழை வீழ்ச்சி. | ☐ |
| 10ºC க்குள்ளும் கிட்டத்தட்ட 60 மி.மீ மழை வீழ்ச்சி | ☐ |
| -30ºC க்கு மேலும் கிட்டத்தட்ட 15 மி.மீ மழை வீழ்ச்சியும் | ☐ |

இ. 2 ஆம் பயிற்சியின் விளக்கப்படத்திலிருந்து எந்த நகரங்களில் மழையும், வெப்பநிலையும் அதிகமாக மாறுபடுகிறது.

மழை அதிகமாக மாறுபடும் நகரம்:

| | |
|---|---|
| கானோய் (Hanoi) | டுனிஸ் (Tunis) |
| டுப்பிலீன் (Dublin) | யாக்குட்ஸ் (Jakutsk) |

வெப்பநிலை அதிகமாக மாறுபடும் நகரம்:

| | |
|---|---|
| கானோய் (Hanoi) | டுனிஸ் (Tunis) |
| டுப்பிலீன் (Dublin) | யாக்குட்ஸ் (Jakutsk) |


© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

**4. இரு கடிதங்களையும் வாசித்து அதன் சிறு விளக்கத்தைக் கூறுக.**

வாசகர் கடிதம் 1

**சிறுவர்களுக்கு பாலுக்குப் பதிலாக நீரைக் கொடுங்கள்**

பாடசாலையின் பசுப்பால் இயற்கையானது அல்ல. உலகத்தில் இருக்கும் இனங்களில் மனிதன் என்ற இனம்தான் வேறொரு இனத்தின் பாலைக் குடிக்கும்.
புதன்கிழமையின் செய்தித்தாளில் ஒரு விரிவான அறிவியல் ஆய்வு முன் வைக்கப்பட்டது.
பசுப்பாலைப் பற்றி மிகவும் பரவலாகக் காணப்படும் அபிப்பிராயம் அளவிற்கு அதிகமானது என இதனுள் ஆவணப்படுத்தப்படுகின்றது.
இவ் ஆய்வு பால் நுகர்வால். ஒரு குறுகிய கால வாழ்க்கையும், எலும்பு முறியும் ஆபத்தும் கூடலாம் என்றும் கூறுகின்றது. பசுப்பால் இயற்கையானதாக இல்லை, அத்துடன் மக்களின் சுகாதாரத்திற்கும், சூழலிற்கும் நல்லது இல்லை.
அதனால் எங்கள் பிள்ளைகளுக்கு புதிய, ஆரோக்கியமான, சூழலுக்கு நன்மையான பழக்கங்களை படிப்பிற்கும் காலம் வந்துள்ளது. பாடசாலைப் பிள்ளைகளின் தாகத்தைத் தீர்க்க தண்ணீரைக் கொடுங்கள்.

கெர்பேர்ட் முல்லர் (Herbert Müller)

"சைவ உணவு" என்ற அமைப்பின் இயக்குனர்.

வாசகர் கடிதம் 2: கெர்பேர்ட் முல்லருக்கு (Herbert Müller) எழுதிய பதில்

**மதிய உணவு வேளைக்கு பாலை வைக்கவும்.**

பாடசாலை மாணவர்கள் பால் குடிப்பது கெர்பேர்ட் முல்லருக்கு (Herbert Müller) விருப்பம் இல்லை. எனது அமைப்பும் மற்றும் ஐக்கிய நாடுகளும் வேறு கருத்தைக் கொண்டுள்ளோம். அனைத்துப் பாடசாலை மாணவர்களும் இலவசமாகப் பாலைப் பெற வேண்டும். பாலில் 18 தொடக்கம் 22 வரையிலான ஊட்டச்சத்து இருப்பதால், இது எமது நாளாந்த தேவைக்குரியதாகின்றது. ஆதலால் பாடசாலை மாணவர்களுக்கு பால் ஒரு சத்துணவாகும். பாடசாலை மாணவர்கள் பாடசாலை உணவுடன் பாலைப் பெற்றுக் கொள்ளாமல் விட்டால் அவர்களுக்குப் போதுமான ஊட்டச் சத்து கிடைக்காது என்பதை புதிய ஆய்வுகள் காட்டுகின்றன.

கிறிஸ்டியன்டட் (Kristianstad) என்னும் பல்கலைக்கழகத்திலிருக்கும் ஊட்டச் சத்து நிபுணரான உல்லா றோசான்டர் (Ulla Rosander) சுவீடனில் உள்ள மூன்று "சுவீடன்" பாடசாலைகளில் ஓர் ஆய்வு செய்தார். மூன்று பாடசாலைகளிலும் ஒரே உணவு கொடுக்கப்பட்டது, ஆனால் ஒரு பாடசாலையில் மாத்திரம் தான் உணவுடன் பாலையும் சேர்த்துக் கொடுத்தார்கள்.
குறைவாகச் சாப்பிடும் மாணவர்களுக்கும் அல்லது நேரம் குறைவாக இருப்பவர்களுக்கும் கல்சியம், விற்றமின் பி12, மக்னீசியம் உடலில் சேர்வதற்கு பாலைக் கொடுக்க வேண்டும் என்பது அவ் ஆய்வின் முடிவாகும். எனவே பாடசாலைகளுக்கு பால் தேவைப்படுகின்றது.

சுசானி விஸ்டர் (Susanne Pfister)
„Pro Bauer" என்ற அமைப்பின் பிரதிநிதி



© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

**5. வாசித்த இரு கடிதங்களில் இருந்து சரியான வசனத்தை தெரிவு செய்க.**

அ. ஏன் பாடசாலை மாணவர்கள் பால் குடிக்க வேண்டும் என திருமதி விஸ்டர் முன்வைத்தார்?

- ☐ பால் குடித்தால் சிறுவர்கள் கூடுதலாகச் சாப்பிடுவார்கள்.
- ☐ பால் குடிப்பதால் ஆயுள் எதிர்பார்ப்பு நீடிக்கப்படும்
- ☐ பாலில் நிறைய ஊட்டச்சத்துக்கள் உள்ளன.

ஆ. ஏன் திரு மையர் நினைத்தார் சிறுவர்கள் பாலிலும் பார்க்க நீரைக் குடிப்பது நல்லது என.

- ☐ நீர் பாலிலும் பார்க்க விலை குறைவு
- ☐ நீர் சூழலுக்கு நல்லது.
- ☐ தண்ணீர் தாகத்தை தீர்க்க நல்லது.

இ. வாசகர் கடிதங்களில் உள்ள ஆய்வு என்ன?

- ☐ பால்நுகர்வினால் நேர்மறை மற்றும் எதிர் மறை விளைவுகள் உண்டு.
- ☐ பால் இல்லாமல், பாடசாலை உணவில் போதியளவு ஊட்டச்சத்து உள்ளது
- ☐ பால் நுகர்வு எலும்புகளை வலுப்படுத்தும்.

ஈ. ஏன் திருமதி விஸ்டர் வாசகர் கடிதத்தை எழுதினார்?

- ☐ திரு முல்லரின் கருத்துப்பிழையானது என்பதை விளக்குவதற்காக.
- ☐ நீர் சூழலிற்கு நல்லது என்பதைக் கூறுகின்றார்.
- ☐ பாடசாலைப் பிள்ளைகள் குறைவாக உணவு உண்பது அவருக்கு விருப்பம் இல்லை.

| | |
|---|---|
| உ. நிறையப் பால் குடிப்பதால் எங்களின் ஆயுள் குறையும் என்ற கருத்தைக் கூறினார். | சரி ☐<br>பிழை ☐ |
| ஊ. திரு முல்லரும், திருமதி விஸ்டரும் ஒரே ஆய்வினை இரு வாசகர் கடிதத்திலும் குறிக்கின்றனர். | சரி ☐<br>பிழை ☐ |
| எ. பால் அருந்துவதால் ஏற்படும் விளைவுகளை பற்றி விஞ்ஞானிகள் ஒரே கருத்தில் உள்ளனர். | சரி ☐<br>பிழை ☐ |



© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

**6.** பயிற்சி 4 இன் இரு வாசகர் கடிதங்களிலும் எக்கடிதம் உங்களுக்குத் திருப்தியானது? ஏன் என்பதைக் கூறுக.



© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

**7. பின்வரும் அட்டவணையைப் பார்வையிட்ட பின்னர் கேள்விக்கு விடை தருக.**

நிக்கோவுக்கு 15 வயது அவன் ஒன்பதாம் வகுப்பில் படிக்கின்றான். புதன்கிழமை மதியத்திற்குப் பின் ஓர் உணவகத்தில் உதவியாளராக இருக்கின்றார். அவனின் பொழுது போக்கு காற்பந்தாட்டம் விளையாடுவது. இங்கே அவனின் கிழமைக்குரிய நேர அட்டவணையுள்ளது.

| | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| 7.45-9.15 | பிரான்ஸ் | ஆங்கிலம் | கணிதம் | பிரான்ஸ் | ஆங்கிலம் |
| *9.15-9.45* | *இடைவேளை* | *இடைவேளை* | *இடைவேளை* | *இடைவேளை* | *இடைவேளை* |
| 9.45-11.15 | கணிதம் | புவியியல் | விஞ்ஞானம் | விஞ்ஞானம் | சரித்திரம் |
| 11.15-12.00 | கணிதம் | புவியியல் | மொழியும் இலக்கியமும் | மொழியும் இலக்கியமும் | மொழியும் இலக்கியமும் |
| *12.00-13.30* | *மதிய இடைவேளை* | *மதிய இடைவேளை* | *மதிய இடைவேளை* | *மதிய இடைவேளை* | *மதிய இடைவேளை* |
| 13.30-15.00 | ஆங்கிலம் | சரித்திரம் | ஆங்கிலம் | மொழியும் இலக்கியமும் | விளையாட்டு |
| *15.00-15.30* | *இடைவேளை* | *இடைவேளை* | | *இடைவேளை* | *இடைவேளை* |
| 15.30-17.00 | மொழியும் இலக்கியமும் | விளையாட்டு | | கணிதம் | சங்கீதம் |
| 17.00-18.00 | | | வேலை | | |
| 18.00-19.00 | | | வேலை | | |
| 19.00-20.00 | காற்பந்தாட்டம் | | வேலை | காற்பந்தாட்டம் | |
| 20.00-21.00 | காற்பந்தாட்டம் | | வேலை | காற்பந்தாட்டம் | |
| 21.00-22.00 | | | வேலை | | |

**கேள்விகள்**

1. எத்தனை கணிதப் பாடங்கள் நிக்கோவுக்கு ஒரு கிழமையில் உள்ளன?

   பதில் : ________________________________________

2. எந்தப் பாடம் கிழமையில் ஒரு தரம் மட்டும் நடைபெறுகின்றது?

   பதில் : ________________________________________

3. எந்தப் பாடங்கள் மதியவேளைக்கு முதல் ஒரு பொழுதும் இல்லை ?

   பதில் : ________________________________________


© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

**8. ஒரு குடும்பத்தில் பிள்ளைகள் கடைப்பிடிக்க வேண்டிய நற்பழக்கங்களைக் கூறுக. (உதாரணமாக படுக்கைக்கு எந்த நேரம் போவது என்பதை பிள்ளைகள் முடிவு செய்யலாம்.) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

அ. எந்த சட்ட ஒழுங்குகள் உங்கள் குடும்பத்தில் பிள்ளைகளுக்கு இருக்கின்றன?

ஆ. எது உங்களுக்குப் பயனுள்ளது அல்லது பயனற்றது? ஏன்?



© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter